இந்திய அரசு

சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்

# 1981 ஆம் ஆண்டு திரைப்படத் தொழிலாளர்கள் நல்வாழ்வு மேல்வரிச் சட்டம்

(சட்ட எண் 30/1981)

(2001, டிசம்பர் 31 அன்று இருந்தவாறு)

# THE CINE-WORKERS WELFARE CESS ACT, 1981

**(Act No. 30 of 1981)**

**(As on the 31st December, 2001)**

*தமிழாக்கம்:*

இந்திய அரசுக்காக

சட்ட (ஆட்சிமொழிப் பிரிவு)த் துறை

தலைமைச்செயலகம்

சென்னை-9.

*தமிழ்நாடு அரசு எழுதுபொருள் அச்சுத் துறை சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.*

2006

PRICE: Rs.17.00

31-13

# 1981 ஆம் ஆண்டு திரைப்படத் தொழிலாளர்கள் நல்வாழ்வு மேல்வரிச் சட்டம்

(சட்ட எண் 30/1981)

# The Cine-Workers Welfare Cess Act, 1981

(Act No. 30 of 1981)

## PREFACE

This edition of the Cine Workers Welfare Cess Act, 1981 (Act No. 30 of 1981) as on the 31st December, 2001 containing the Authoritative Texts of that Act in Tamil and the same was published in the **Gazette of India,** Extraordinary, Part XV, Section 1, Vol. I, dated 10th February 2004 on pages from 2 to 5.

The Authoritative Texts in Tamil was published under the authority of the President under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973) and on such publication, it became the Authoritative Texts of the Act in Tamil.

New Delhi,
10th February, 2004.

(Signed)....................,
*Secretary to Government of India.*

# முன்னுரை

*2001, டிசம்பர் 31 ஆம் தேதியிலிருந்தவாறுள்ள*

1981 ஆம் ஆண்டு திரைப்படத்தொழிலாளர்கள் நல்வாழ்வு மேல்வரிச் சட்டம் (சட்ட எண் 30/1981) இன் இந்தப் பதிப்பு அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான தமிழ் வாசகத்தைக் கொண்டுள்ளது. இது, 2004, பிப்ரவரி 10 ஆம் தேதியிட்ட **இந்திய அரசிதழின்** சிறப்பிதழ் பகுதி XV பிரிவு 1, தொகுதி I இன் 2 முதல் 5 வரையிலான பக்கங்களில் வெளியிடப்பட்டது.

இந்த அதிகாரவுரிமைப்படியான வாசகமாகிய தமிழ்மொழிபெயர்ப்பு, அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 இன் (50/1973) பிரிவு 2 இன் கூறு (அ)வின்படி குடியரசுத்தலைவருக்குள்ள அதிகாரத்தின்படி வெளியிடப்பட்டது. அவ்வாறு வெளியிடப்பட்டதன் பேரில், இது தமிழில் அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான வாசகம் ஆயிற்று.

புதுதில்லி,
10 பிப்ரவரி, 2004.

(ஒப்பம்)......................,
*இந்திய அரசாங்கச் செயலாளர்.*

# 1981 ஆம் ஆண்டு திரைப்படத் தொழிலாளர்கள் நல்வாழ்வு மேல்வரிச் சட்டம்

## (சட்ட எண் 30/1981)

### பொருளடக்கம்


| பிரிவு | | பக்கம் |
|---|---|---|
| 1. | குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம். | 1 |
| 2. | பொருள்வரையறைகள். | 1 |
| 3. | நீள் திரைப்படங்களுக்கு மேல்வரி விதித்துத் தண்டல் செய்தல். | 1 |
| 4. | ஆயத் தீர்வையைச் செலுத்துதல். | 2 |
| 5. | தீர்வையிலிருந்து கிடைக்கும் தொகை இந்தியாவின் திரள்நிதியத்தில் வரவு வைக்கப்படுதல் வேண்டும். | 2 |
| 6. | விலக்களிப்பதற்கு மைய அரசுக்குள்ள அதிகாரம். | 3 |
| 7. | ஆயத் தீர்வையைச் செலுத்தாதற்கான தண்டம். | 3 |
| 8. | இந்தச் சட்டத்தின்படி கொடுபடவேண்டியதாகிற தொகைகளை வசூலித்தல். | 3 |
| 9. | நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட நடவடிக்கைக்குக் காப்பளிப்பு. | 3 |
| 10. | விதிகளை வகுப்பதற்கு அதிகாரம். | 3 |

# 1981 ஆம் ஆண்டு திரைப்படத் தொழிலாளர்கள் நல்வாழ்வு மேல்வரிச் சட்டம்

## (சட்ட எண் 30/1981)

[*1981, செப்டம்பர் 14*]

குறித்தசில திரைப்படத் தொழிலாளர்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளுக்குப் பணஉதவி செய்வதற்காக நீள் திரைப்படங்களுக்கு மேல்வரி விதித்துத் தண்டல் செய்வதற்கும் அதனுடன் தொடர்புடைய அல்லது அதற்குச் சார்வுறு பொருட்பாடுகளுக்கும் வகைசெய்வதற்கான சட்டம்.

இது, இந்தியக் குடியரசின் முப்பத்து இரண்டாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

*குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.*

1. (1) இந்தச் சட்டம், 1981 ஆம் ஆண்டு திரைப்படத் தொழிலாளர்கள் நல்வாழ்வு மேல்வரிச் சட்டம் என்று வழங்கப்பெறும்.

(2) இது, இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது, மைய அரசு, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்திடலாகும் தேதியன்று செல்லாற்றல் பெறும்.

*பொருள் வரையறைகள்.*

2. இந்தச் சட்டத்தில், தறுவாயின் தேவை வேறானாலன்றி,—

37/1952 (அ) "திரைப்படம்" என்பது, 1952 ஆம் ஆண்டு திரைப்படச் சட்டத்திலுள்ள பொருளினை உடையது ஆகும்;

52 (ஆ) "நீள்திரைப்படம்" என்பது, கதையமைப்பானது, முழுமையாக எடுத்துரைத்தல், இயக்கம் அல்லது கேலிசித்திரம் வாயிலாக விளக்குதல் மூலமாக அன்றி, பெரும்பாலும் உரையாடல்கள் வாயிலாக வெளிப்படுத்தப்பட்டு, ஒரு வடிவத்துடனும், கதையானது எண்ணற்றப் பாத்திரங்களைச் சுற்றிப் பின்னப்பட்டும், இந்தியாவில் முழுவதுமாக அல்லது பகுதியாகத் தயாரிக்கப்பட்ட முழுநீளத் திரைப்படம் என்று பொருள்படும்; அது விளம்பரப்படம் ஒன்றை உள்ளடக்காது;

(இ) "வகுத்துரைக்கப்பட்ட" என்பது, இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகளினால் வகுத்துரைக்கப்பட்ட என்று பொருள்படும்;

(ஈ) நீள்திரைப்படம் ஒன்றைப் பொறுத்தவரை, "தயாரிப்பாளர்" என்பது,—

(i) அத்தகைய படத்தின் தயாரிப்பாளர்; அல்லது

37/1952 (ii) 1952 ஆம் ஆண்டு திரைப்படச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின்படி அத்தகைய படத்தைப் பொறுத்து உறுதிச்சான்றிற்காக விண்ணப்பம் பிற எவரேனும் நபரால் செய்யப்படுகிறவிடத்து,

1952 அத்தகைய பிறநபர் ஒருவர்,

என்று பொருள்படும்.

*நீள் திரைப் படங்களுக்கு மேல்வரி விதித்து தண்டல் செய்தல்.*

3. [1][(1) மைய அரசு, அவ்வப்போது, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்துரைக்கலாகிற நீள்திரைப்படம் ஒவ்வொன்றிற்கும், ஓராயிரம் ரூபாய்க்குக் குறையாததும், இருபதாயிரம் ரூபாய்க்கு மேற்படாததுமான வீதத்தில் ஆயத்தீர்வையானது, 1981 ஆம் ஆண்டு திரைப்படத் தொழிலாளர்கள் நல்வாழ்வு நிதியச் சட்டத்தின் நோக்கங்களுக்காக ஒரு மேல் வரியாக விதித்துத் தண்டல் செய்யப்படுதல் வேண்டும்.]

---

[1] 1993 ஆம் ஆண்டு திரைப்படத் தொழிலாளர்கள் நல்வாழ்வு மேல்வரி (திருத்தச்) சட்டத்தின் 2 ஆம் பிரிவினால், முன்பிருந்த (1) ஆம் கூறுக்கு மாற்றாக அமைக்கப்பட்டது.

(2). (1) ஆம் உட்பிரிவின்படி விதிக்கப்பட்ட ஆயத் தீர்வையானது, அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதன்படியும் திரைப்படங்களுக்கு விதிக்கப்படத்தக்க மேல்வரி அல்லது தீர்வை எதற்கும் கூடுதலாக இருக்கும்.

ஆயத் தீர்வையைச் செலுத்துதல்.

37/1952 4. (1) நீள்திரைப்படம் எதற்கும், 3 ஆம் பிரிவின்படி விதிக்கப்பட்ட ஆயத்தீர்வையானது, 1952 ஆம் ஆண்டு திரைப்படச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின்படி அத்தகைய படத்தைப் பொறுத்து உறுதிச்சான்றுக்காக, அவர் விண்ணப்பம் செய்திருக்கிற தேதியன்று அல்லது அதற்குமுன்பு, அத்தகைய படத்தின் தயாரிப்பாளரால் மைய அரசுக்குச் செலுத்தத்தக்கது ஆகும்:

வரம்புரையாக: அத்தகைய படத்தின் தயாரிப்பாளர்,—

37/1952 (அ) அத்தகைய படத்தைப் பொறுத்து உறுதிச்சான்று எதனையும் வழங்குவதற்கு மறுக்கிற ஆணையொன்று, 1952 ஆம் ஆண்டு திரைப்படச் சட்டத்தின் 5 (அ) பிரிவுடன் சேர்த்துப் படிக்கப்படும் 4 ஆம் பிரிவின்படி இடப்பட்டிருக்கிறது என்ற, மற்றும்

2 (ஆ) அத்தகைய ஆணைக்கு எதிராக மேல்முறையீடு செய்வதற்கு அல்லது அத்தகைய ஆணையை மேலாய்வு செய்வதற்குத் தான் கருதியிருக்கவில்லை அல்லது, நேர்வுக்கேற்ப, மேற்சொன்ன ஆணை மேற்சொன்ன சட்டத்தின்படி மேல்முறையீட்டின் அல்லது மேலாய்வின்படி உறுதிசெய்யப்பட்டிருக்கிறது என்ற,

காரணத்தின்பேரில், அத்தகைய படத்தைப் பொறுத்து அவரால் செலுத்தப்பட்ட தீர்வையைத் திருப்பித்தருவதற்காக மைய அரசுக்கு விண்ணப்பம் செய்யலாம்:

**மேலும் வரம்புரையாக:** முந்திய வரம்புரையின்படி தீர்வையைத் திருப்பித் தந்ததற்குப் பின்பு, திரைப்படம் எதனையும் பொறுத்து, மேற்சொன்ன சட்டத்தின்படி உறுதிச்சான்று எதனையும் வழங்குகிற நேர்வில், தயாரிப்பாளர், அத்தகைய உறுதிச்சான்று வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஏழுநாள் காலஅளவுக்குள் அவ்வாறு திருப்பித்தரப்பட்ட தீர்வையை மைய அரசுக்குத் திருப்பிச் செலுத்துவதற்குக் கடப்பாடுடையவராவார்.

(2) தனி வட்டியானது,—

(அ) திரைப்படம் எதனையும் பொறுத்து, (1) ஆம் உட்பிரிவின் முதல் வரம்புரையின்படி மைய அரசால் திருப்பித் தரப்பட்ட தீர்வைத் தொகையின்மீது, அத்தகைய தீர்வை செலுத்தப்பட்ட தேதியிலிருந்து அவ்வாறு திருப்பித் தரப்பட்ட தேதிவரை, மைய அரசால்,

(ஆ) (1) ஆம் உட்பிரிவின் முதல் வரம்புரையின்படி அவருக்குத் திருப்பித் தரப்பட்டதும் அந்த உட்பிரிவின் இரண்டாம் வரம்புரையின்படி அவரால் மைய அரசுக்குச் செலுத்தப்பட்டதுமான தீர்வை எதனின் தொகையின்மீது அவ்வாறு திருப்பித் தரப்பட்ட தேதியிலிருந்து திருப்பிச் செலுத்தப்பட்ட தேதிவரை தயாரிப்பாளரால்,

ஆண்டிற்கு பன்னிரண்டு விழுக்காடு என்ற வீதத்தில் செலுத்தப்படத்தக்கதாகும்.

தீர்வையிலிருந்து கிடைக்கும் தொகை இந்தியாவின் திரள்நிதியத்தில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

5. 3 ஆம் பிரிவின்படி விதிக்கத்தக்க ஆயத்தீர்வையிலிருந்து கிடைக்கும்தொகை இந்தியாவின் திரள்நிதியத்தில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

6. இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், மைய அரசானது, நீள்திரைப்படத்தின் உள்ளடக்கம், அதன் தொழில்நுட்பத் தரம் பிற கூறுகள் ஆகியவற்றைக் கவனத்திற்கொண்டு, அது, இந்தச் சட்டத்தின் வகையங்கள் அனைத்திலிருந்தும் அல்லது அவற்றுள் எதிலிருந்தும், அத்தகைய நீள் திரைப்படத்திற்கு அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகவும், மேற்சொன்ன அறிவிக்கையில் குறித்துரைக்கப்படலாகும் வரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகளுக்கு உட்பட்டும் விலக்களிப்பது தேவையெனக் கருதுமாயின், அவ்வாறு செய்யலாம். விலக்களிப்பதற்கு மைய அரசுக்குள்ள அதிகாரம்.

7. திருப்பிக் கொடுக்கப்பட்டு ஆனால் 4ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் இரண்டாம் வரம்புரையின்படி மைய அரசுக்குத் திருப்பிச் செலுத்துமாறு கோரப்பட்ட ஆயத்தீர்வை எதுவும் உள்ளடங்கலாக அந்தப் பிரிவின்படி அந்த அரசுக்கு நீள்திரைப்படம் ஒன்றின் தயாரிப்பாளரால் செலுத்தத்தக்க ஆயத்தீர்வை எதுவும், அதில் குறித்துரைக்கப்பட்ட தேதிக்குமுன்பு அல்லது, நேர்வுக்கேற்ப, காலஅளவிற்குள் செலுத்தப்படவில்லை எனில், நிலுவையாக இருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் இதற்கென வகுத்துரைக்கப்பட்ட அதிகாரஅமைப்பு, அது பொருத்தமெனக் கருதுகிற விசாரணையைச் செய்தபின்பு, அந்த ஆயத்தீர்வை நிலுவையாக இருக்கிற ஒவ்வொரு மாதத்திற்கும், ஐம்பது ரூபாய்க்கு மேற்படாத தண்டத்தை, தயாரிப்பாளருக்கு விதிக்கலாம்: ஆயத் தீர்வையைச் செலுத்தாததற் கான தண்டம்.

**வரம்புரையாக:** அத்தகைய தண்டம் எதனையும் விதிப்பதற்கு முன்பு, அத்தகைய தயாரிப்பாளருக்குக் கேட்கப்படுவதற்கு ஒரு வாய்ப்பு அளிக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அவ்வாறு கேட்கப்பட்டதற்குப் பின்பு, அந்தத் தவறுகைக்கு சரியானதும் போதியதுமான காரணம் எதுவும் இருந்தது என்று மேற்சொன்ன அதிகார அமைப்பு தெளிவுறக் காணுமாயின், இந்தப் பிரிவின்படி தண்டம் எதுவும் விதிக்கப்படுதல் ஆகாது.

8. (7 ஆம் பிரிவின்படி செலுத்தத்தக்கத் தண்டம், ஏதேனுமிருப்பின், அது உள்ளடங்கலாக) இந்தச் சட்டத்தின்படி நீள்திரைப்படம் ஒன்றின் தயாரிப்பாளர் எவரிடமிருந்தும் கொடுபடவேண்டிய தொகை எதுவும், நிலவருவாய் நிலுவையாக இருந்தாற் போன்ற அதே முறையில் மைய அரசால் வசூலிக்கப்படலாம். இந்தச் சட்டத்தின்படி கொடுபட வேண்டிய தாயிருக்கிற தொகைகளை வசூலித்தல்.

9. உரிமைவழக்கு, குற்றவழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும், இந்தச் சட்டத்தின்படி அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளின்படி நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட எவற்றிற்காகவும், மைய அரசுக்கு அல்லது மைய அரசின் அலுவலர் எவருக்கும் அல்லது பிற வேலை பெறுநர் எவருக்கும் எதிராகத் தொடுக்கப்படுதல் ஆகாது. நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட நடவடிக்கைக்குக் காப்பளிப்பு.

10. (1) மைய அரசு, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, இந்தச் சட்டத்தின் வகையங்களை நிறைவேற்றுவதற்கான விதிகளை வகுக்கலாம். விதிகளை வகுப்பதற்கு அதிகாரம்.

(2) குறிப்பாகவும், முன்சொன்ன அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றியும் அத்தகைய விதிகள்,—

(அ) 3 ஆம் பிரிவின்படி ஆயத்தீர்வையை விதித்தலுக்கும் திரட்டுதலுக்கும்;

(ஆ) 7 ஆம் பிரிவின்படி தண்டம் எதனையும் விதிக்கும் அதிகார அமைப்பிற்கும்;

(இ) வகுத்துரைக்கப்படுமாறு வேண்டுறுத்தப்பட்ட அல்லது வேண்டுறுத்தப்படும் பிற பொருட்பாடு எதற்கும்,

வகைசெய்யலாம்.

(3) இந்தப் பிரிவின்படி வகுக்கப்பட்ட விதி ஒவ்வொன்றும், அது வகுக்கப்பட்ட பின்பு, கூடியவிரைவில், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றிலும், ஒரு கூட்டத்தொடரிலோ அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அடுத்தடுத்தக் கூட்டத்தொடர்களிலோ அடங்கியிருக்கலாகும் முப்பது நாட்கள் கொண்ட ஒரு மொத்த கால அளவுக்கு அது அமர்விலிருக்கையில், அதன்முன் வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் மேற்சொன்ன கூட்டத்தொடர்களை அல்லது அடுத்தடுத்தக் கூட்டத்தொடர்களை உடனடியாகத் தொடர்ந்து வரும் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு, அந்த விதியில் மாற்றமைவு எதனையும் செய்வதற்கு இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அல்லது அந்த விதி செய்யப்படுதலாகாது என்பதில் இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அதன்பின்பு, அந்த விதி, அவ்வாறு மாற்றமைவு செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்திறம் உடையது ஆகும் அல்லது, நேர்வுக்கேற்ப, செல்திறம் இல்லாது போகும்; எனினும், அத்தகைய மாற்றமைவு அல்லது அழித்தறவு எதுவும், அந்த விதியின்படி முன்னதாகச் செய்யப்பட்ட எதனின் செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

•ஒ•ஹ•